


Ramsar
Convention on Wetlands

TAMILNADU STATE WETLAND AUTHORITY

# சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை

## தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கம்

# ராம்சார் தலங்கள்

## தமிழ் நாடு

தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கம்
ராம்சார் தலங்கள் தமிழ்நாடு



பெரும் பூநாரை



## திரு.மு.க.ஸ்டாலின்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்


"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய தரண்"
(திருக்குறள் எண் 742)

தமிழ்நாடு அரசின் தனித்துவமான முயற்சியான தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கத்தின் கீழ், 15 புதிய ராம்சார் தலங்களை நாம் பெற்றுள்ளோம் என்பதைக் குறிப்பிடுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கத்தின் கீழ், ஈரநிலங்களைப் பொறுத்து, உள்ளூர் சமூகங்களின் வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக ராம்சார் தலங்கள் மற்றும் பிற ஈரநிலங்கள் சுற்றுச்சூழல் ரீதியாக மறுசீரமைப்பு செய்யப்படும். எனவே, நம் அனைவரது நீர், காலநிலை மற்றும் உணவுப் பாதுகாப்புக்காக ஈரநிலங்களைப் பாதுகாக்குமாறு தமிழக மக்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

-- மு.க.ஸ்டாலின்

# ராம்சார் தலங்கள் - தமிழ்நாடு

Ramsar
Convention on Wetlands




1 பள்ளிக்கரணை சதுப்புநில காப்புக்காடு (சென்னை)
2 கரிக்கிலி பறவைகள் சரணாலயம் (செங்கல்பட்டு)
3 வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் (செங்கல்பட்டு)
4 பிச்சாவரம் அலையாத்திக் காடுகள் (கடலூர்)
5 வடுவூர் பறவைகள் சரணாலயம் (திருவாரூர்)
6 உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம் (திருவாரூர்)
7 கோடியக்கரை வன உயிரின மற்றும் பறவைகள் சரணாலயம் (நாகப்பட்டினம்)
8 சித்திரங்குடி பறவைகள் சரணாலயம் (இராமநாதபுரம்)
9 காஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயம் (இராமநாதபுரம்)
10 மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகம் (இராமநாதபுரம்)
11 கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம் (திருநெல்வேலி)
12 சுசீந்திரம் – தேரூர் ஈரநில வளாகம் (கன்னியாகுமரி)
13 வேம்பனூர் ஈரநில வளாகம் (கன்னியாகுமரி)
14 வெள்ளோடு பறவைகள் சரணாலயம் (ஈரோடு)
15 லாங்வுட் சோலை காப்புக்காடு (நீலகிரி)
16 கரைவெட்டி பறவைகள் சரணாலயம் (அரியலூர்)



வெளிமான்





புள்ளி மூக்கு வாத்து

Ramsar
Convention on Wetlands



# ராம்சார் உடன்படிக்கை

ஈரநிலங்கள் தொடர்பான ராம்சார் உடன்படிக்கையில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. தற்போது, 172 நாடுகள் ஈரநிலங்கள் தொடர்பான ராம்சார் உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளன. மேலும், உலகளவில் சுமார் 2541 ஈரநிலங்கள் ராம்சார் தலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 ஆம் தேதி ராம்சார் உடன்படிக்கையில் இந்தியா இணைந்தது. இதுவரை இந்தியாவில் மொத்தம் 80 ஈரநிலங்கள் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

2002 ஆம் ஆண்டில் கோடியக்கரை வனவிலங்கு & பறவைகள் சரணாலயம் தமிழ்நாட்டின் ஓரே ஒரு ராம்சார் தலமாக இருந்தது. இத்தலம் 2002 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 ஆம் தேதி அன்று ராம்சார் தலமாக (தலம் எண் 1210) அறிவிக்கப்பட்டது. சமீபத்தில் 2022 - 2024 ஆம் ஆண்டுகளில், இரு தசாப்தங்களுக்குப் பிறகு, மாநிலத்தில் 15 புதிய ராம்சார் தலங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதன் மூலம் ராம்சார் தலங்களின் எண்ணிக்கை அடிப்படையில், தமிழ் நாடு நாட்டின் முதன்மை மாநிலமாக மாறியுள்ளது.

## இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள ராம்சார் தலங்களின் எண்ணிக்கை

| வரிசை எண் | மாநிலம் | ராம்சார் தலங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 16 |
| 2 | உத்தரப்பிரதேசம் | 10 |
| 3 | ஜம்மு & காஷ்மீர் | 6 |
| 4 | ஒடிசா | 6 |
| 5 | பஞ்சாப் | 6 |
| 6 | குஜராத் | 4 |
| 7 | மத்திய பிரதேசம் | 4 |
| 8 | ஹிமாச்சல பிரதேசம் | 3 |
| 9 | கேரளா | 3 |
| 10 | மகாராஷ்டிரா | 3 |
| 11 | ஹரியானா | 2 |
| 12 | ராஜஸ்தான் | 2 |
| 13 | மேற்கு வங்காளம் | 2 |
| 14 | ஆந்திரப் பிரதேசம் | 1 |
| 15 | அசாம் | 1 |
| 16 | பீகார் | 1 |
| 17 | கோவா | 1 |
| 18 | கர்நாடகா | 4 |
| 19 | லடாக் | 1 |
| 20 | மணிப்பூர் | 1 |
| 21 | மிசோரம் | 1 |
| 22 | திரிபுரா | 1 |
| 23 | உத்தரகாண்ட் | 1 |
| | **மொத்தம்** | **80** |

## ராம்சார் தலங்களுக்கான நிபந்தனைகள்

நிபந்தனை 1. ஒரு ஈரநிலம் சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட வேண்டுமென்றால், குறிப்பிட்ட உயிர் புவியியல் பகுதியில் காணப்படும் அரிதான அல்லது தனித்தன்மை வாய்ந்த உதாரணங்களுடன் கூடிய இயற்கை அல்லது இயற்கை அமைப்பை கொண்டதாக இருக்க வேண்டும்.

நிபந்தனை 2. ஒரு ஈரநிலம் சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட வேண்டுமென்றால், அழிந்து வரும் அல்லது அழிவின் விளிம்பில் உள்ள உயிரினங்கள் அல்லது அச்சுறுத்தப்படும் உயிர் சூழியல் சமூகங்களை ஆதரிக்க வேண்டும்.

நிபந்தனை 3. ஒரு ஈரநிலம் சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட வேண்டுமென்றால், ஒரு குறிப்பிட்ட உயிர் புவியியல் பகுதியின் பல்லுயிர் பணமையை ஆதரிக்க வேண்டும்.

நிபந்தனை 4. ஒரு ஈரநிலம் சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட வேண்டுமென்றால், தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் வாழ்க்கைச் சுழற்சியில் முக்கியமான கட்டத்தில் ஆதரிக்க வேண்டும் அல்லது பாதகமான சூழ்நிலைகளில் அடைக்கலம் அளிக்க வேண்டும்.

நிபந்தனை 5. ஒரு ஈரநிலம் சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட வேண்டுமென்றால், 20,000 அல்லது அதற்கு மேற்பட்ட நீர்ப்பறவைகளைத் தொடர்ந்து ஆதரிக்க வேண்டும்.

நிபந்தனை 6. ஒரு ஈரநிலம் சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட வேண்டுமென்றால், ஒரு தனிப்பட்ட நீர்ப்பறவை இனத்தின் அல்லது துணை இனத்தின் 1% இனத்தொகையை தொடர்ந்து ஆதரிக்க வேண்டும்.

நிபந்தனை 7. ஒரு ஈரநிலம் சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட வேண்டுமென்றால், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான உள்நாட்டு மீன் கிளையினங்கள், இனங்கள் அல்லது குடும்பங்கள், வாழ்க்கை வரலாற்று நிலைகள், இனங்களின் தொடர்பு அல்லது ஈரநில நன்மைகளின் பிரதிநிதியாக இருக்கும் இனத்தொகை மற்றும் / அல்லது அதன் மதிப்புகள் ஆகியவற்றை ஆதரிப்பதன் மூலம் உலகளாவிய உயிர் பன்முகத்தன்மைக்கு பங்களிக்க வேண்டும்.

நிபந்தனை 8. ஒரு ஈரநிலம் சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட வேண்டுமென்றால், அத்தலத்தில் அல்லது வேறு ஈர நிலத்தில் இருக்கும் மீன்களுக்கு உணவு வழங்கும் முக்கியமான ஆதாரமாகவோ, முட்டையிடும் தலம், வளர்ப்பிடம் மற்றும் / அல்லது வலசை பாதையாக இருக்க வேண்டும்.

நிபந்தனை 9. ஒரு ஈரநிலம் சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட வேண்டுமென்றால், ஈரநிலம் சார்ந்த பறவை அல்லாத விலங்கு இனத்தின் அல்லது அவற்றின் துணை இனத்தின் 1% இனத்தொகையினை ஆதரிக்க வேண்டும்.

Ramsar
Convention
on Wetlands

# பள்ளிக்கரணை சதுப்புநிலம் காப்புக்காடு



நீலச்சிறகி

| | | |
|---|---|---|
| தலம் எண் | : | 2481 |
| அறிவிக்கை செய்த நாள் | : | 26.07.2022 |
| மாவட்டம் | : | சென்னை |
| அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை | : | 12°55′40″N 80°13′13″E |
| நிலப்பரப்பு | : | 1247.54 ha |

## சிறப்பு அம்சங்கள்

* இத்தலம் தீவிர தட்பவெப்ப நிலைகளின் பொழுது ஒரு இடையகமாக செயல்பட்டு தாக்கத்தை குறைக்கின்றது.
* இத்தலம் மத்திய ஆசிய வலசை பகுதியில் உள்ளது.




## நிபந்தனைகள்

1. அரிதான (அ) தனித்தன்மைக்கான உதாரணமாக உள்ள இயற்கை (அ) இயற்கை அமைப்புடன் ஒத்த ஈரநிலம்.
2. அழிந்து வரும் கூழைக்கிடா, மென்தொடு ஆமை மற்றும் வெள்ளை அரிவாள் மூக்கன் ஆகிய உயிரினங்களுக்கு புகலிடமாக திகழ்கிறது.
3. ஒரு குறிப்பிட்ட உயிர் புவியியல் பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தை பராமரிக்க உதவுகிறது.
4. உள்நாட்டு பறவை இனங்களின் வாழ்க்கை சுழற்சியில் முக்கியமான கட்டத்தில் ஆதரவு அளிக்கிறது.
6. மஞ்சள் மூக்கு நாரை, கூழைக்கிடா மற்றும் வெள்ளை அரிவாள் மூக்கன் போன்ற பறவையினங்களின் 1% எண்ணிக்கையை தொடர்ந்து ஆதரிக்கிறது.
7. உள்நாட்டு மீன்களின் துணை இனத்தின் (அ) இனத்தின் குறிப்பிடத்தக்க விகிதம் மற்றும் எண்ணிக்கையை ஆதரிக்கிறது.
8. மீன்களின் இனப்பெருக்கத்தலம், வலசைப்பாதை மற்றும் உணவுகளை வழங்கும் மூலாதாரமாகத் திகழ்கிறது.



நீலத் தாழைக் கோழி



# கரிக்கிலி பறவைகள் சரணாலயம்



| | | |
|---|---|---|
| தலம் எண் | : | 2480 |
| அறிவிக்கை செய்த நாள் | : | 26.07.2022 |
| மாவட்டம் | : | செங்கல்பட்டு |
| அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை | : | 12°35′56″N 79°50′32″E |
| நிலப்பரப்பு | : | 58.44 ha |


ஊசிவால் வாத்து

## சிறப்பு அம்சங்கள்

* பறவை எச்சத்தால் வளப்படுத்தப்பட்ட நீர் விவசாய உற்பத்தியை அதிகப்படுத்த உதவுகிறது.
* சர்வதேச பறவை மற்றும் உயிரியல் பன்முகத்தன்மை பகுதி குறியீடு: IN-TN-29.


## நிபந்தனைகள்

3 ஒரு குறிப்பிட்ட உயிர் புவியியல் பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தை பராமரிக்க இத்தலம் உதவுகிறது.

4 கூழைக்கிடா மற்றும் பல பறவையினங்களின் வாழ்க்கை சுழற்சியில் முக்கிய கட்டத்தில் ஆதரவு வழங்குகிறது.

6 கூழைக்கிடா பறவையினத்தின் 1% எண்ணிக்கையை தொடர்ந்து ஆதரிக்கிறது.

7 உள்நாட்டு மீன்களின் துணை இனத்தின் (அ) இனத்தின் குறிப்பிடத்தக்க விகிதம் மற்றும் எண்ணிக்கையை ஆதரிக்கிறது.





Ramsar
Convention
on Wetlands

# வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்




கூழைக்கிடா



| | | |
|---|---|---|
| தலம் எண் | : | 2477 |
| அறிவிக்கை செய்த நாள் | : | 03.08.2022 |
| மாவட்டம் | : | செங்கல்பட்டு |
| அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை | : | 12°32'47"N 79°51'21"E |
| நிலப்பரப்பு | : | 40.35 ha |

## சிறப்பு அம்சங்கள்

* இத்தலத்தில் இருக்கும் மரங்கள் பறவைகள் கூடு கட்டும் மற்றும் ஓய்வெடுக்கும் இடமாக பயன்படுகிறது.
* பறவை எச்சத்தால் வளப்படுத்தப்பட்ட நீர் விவசாய உற்பத்தியை அதிகப்படுத்த உதவுகிறது.
* சர்வதேச பறவை மற்றும் உயிரியல் பன்முகத்தன்மை பகுதி குறியீடு: IN-TN- 29.




## நிபந்தனைகள்

2 அழிந்து வரும் கூழைக்கிடா மற்றும் வெள்ளை அரிவாள் மூக்கன் ஆகிய பறவைகளுக்கு புகலிடமாக திகழ்கிறது.

3 ஒரு குறிப்பிட்ட உயிர் புவியியல் பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தை பராமரிக்க உதவுகிறது.

4 நத்தைகொத்தி நாரை மற்றும் கூழைக்கிடா போன்ற பறவையினங்களின் வாழ்க்கை சுழற்சியில் முக்கிய கட்டத்தில் ஆதரவு வழங்குகிறது.

5 இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட நீர்பறவைகளை தொடர்ந்து ஆதரிக்கிறது.

6 மஞ்சள்மூக்கு நாரை மற்றும் கூழைக்கிடா போன்ற பறவையினங்களின் 1% எண்ணிக்கையை தொடர்ந்து ஆதரிக்கிறது.

7 உள்நாட்டு மீன்களின் துணை இனத்தின் (அ) இனத்தின் குறிப்பிடத்தக்க விகிதம் மற்றும் எண்ணிக்கையை ஆதரிக்கிறது.

8 மீன்களின் இனப்பெருக்கத்தலம், வலசைப்பாதை மற்றும் உணவுகளை வழங்கும் மூலாதாரமாகத் திகழ்கிறது.



மஞ்சள் மூக்கு நாரை



Ramsar
Convention on Wetlands

# பிச்சாவரம் அலையாத்திக் காடுகள்

| | | |
|---|---|---|
| தலம் எண் | : | 2482 |
| அறிவிக்கை செய்த நாள் | : | 26.07.2022 |
| மாவட்டம் | : | கடலூர் |
| அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை | : | 11°26'17"N 79°47'11"E |
| நிலப்பரப்பு | : | 1478.64 ha |




பொன்னிற உப்புகொத்தி

## சிறப்பு அம்சங்கள்

* நிலத்திற்கும் கடலுக்கும் இடையில் ஒரு இடையங்கமாக செயல்பட்டு இயற்கைப் பேரிடர்களின் போது கவசமாகச் செயல்படுகிறது.
* மீன்வள உற்பத்தியை மேம்படுத்துகிறது
* சர்வதேச பறவை மற்றும் உயிரியல் பன்முகத்தன்மை பகுதி குறியீடு: IN-TN-38.

## நிபந்தனைகள்

1. அரிதான (அ) தனித்தன்மைக்கான உதாரணமாக உள்ள இயற்கை (அ) இயற்கை அமைப்புடன் ஒத்த ஈரநிலம்.
2. அழிந்து வரும் கடல் ஆமை மற்றும் நீர் நாய் ஆகிய உயிரினங்களுக்கு புகழிடமாக திகழ்கிறது.
3. ஒரு குறிப்பிட்ட உயிர் புவியியல் பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தை பராமரிக்க உதவுகிறது.
4. கடல் ஆமைகள், பறவைகள் மற்றும் பல இனங்களின் வாழ்க்கை சுழற்சியில் முக்கியமான கட்டத்தில் ஆதரவு அளிக்கும் ஈரநிலம்.
5. இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட நீர்பறவைகளை தொடர்ந்து ஆதரிக்கிறது.
6. கூழைக்கிடா மற்றும் வெள்ளை அரிவாள் மூக்கன் போன்ற பறவையினங்களின் 1% எண்ணிக்கையை தொடர்ந்து ஆதரிக்கிறது.
7. உள்நாட்டு மீன்களின் துணை இனத்தின் (அ) இனத்தின் குறிப்பிடத்தக்க விகிதம் மற்றும் எண்ணிக்கையை ஆதரிக்கிறது.
8. மீன்களின் இனப்பெருக்கத்தலம், வலசைப்பாதை மற்றும் உணவுகளை வழங்கும் மூலாதாரமாகத் திகழ்கிறது.










# வடுவூர் பறவைகள் சரணாலயம்

| | | |
|---|---|---|
| தலம் எண் | : | 2493 |
| அறிவிக்கை செய்த நாள் | : | 13.08.2022 |
| மாவட்டம் | : | திருவாரூர் |
| அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை | : | 10°42′10"N 79°18′59"E |
| நிலப்பரப்பு | : | 112.64 ha |

## சிறப்பு அம்சங்கள்

* பறவை எச்சத்தால் வளப்படுத்தப்பட்ட நீர் விவசாய உற்பத்தியை அதிகப்படுத்த உதவுகிறது.
* இத்தலம் மத்திய ஆசிய வலசை பகுதியில் உள்ளது.
* சர்வதேச பறவை மற்றும் உயிரியல் பன்முகத்தன்மை பகுதி குறியீடு: IN-TN-28




## நிபந்தனைகள்

2 அழிந்து வரும் பாம்புத் தாரா மற்றும் வெள்ளை அரிவாள் மூக்கன் ஆகிய பறவைகளுக்கு புகழிடமாக திகழ்கிறது.

3 ஒரு குறிப்பிட்ட உயிர் புவியியல் பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தை பராமரிக்க உதவுகிறது.

4 பாம்புத் தாரா மற்றும் வெள்ளை அரிவாள் மூக்கன் போன்ற பறவையினங்களின் வாழ்க்கை சுழற்சியில் முக்கிய கட்டத்தில் ஆதரவு வழங்குகிறது.

5 இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட நீர்பறவைகளை தொடர்ந்து ஆதரிக்கிறது.

6 வெள்ளை அரிவாள் மூக்கன் பறவையினத்தின் 1% எண்ணிக்கையை தொடர்ந்து ஆதரிக்கிறது.



கருப்பு வெள்ளை மீன்கொத்தி



நீலவால் பஞ்சுருட்டான்




# உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம்

| | | |
|---|---|---|
| தலம் எண் | : | 2476 |
| அறிவிக்கை செய்த நாள் | : | 03.08.2022 |
| மாவட்டம் | : | திருவாரூர் |
| அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை | : | 10°27′02″N 79°33′16″E |
| நிலப்பரப்பு | : | 43.77 ha |


நத்தைக்குத்தி நாரை

## சிறப்பு அம்சங்கள்

* தலத்திலுள்ள மரங்கள் பறவைகளுக்கு ஓய்வு மற்றும் கூடு கட்டும் தலமாக பயன்படுகிறது.
* பறவை எச்சத்தால் வளப்படுத்தப்பட்ட நீர் விவசாய உற்பத்தியை அதிகப்படுத்த உதவுகிறது.
* இத்தலம் மத்திய ஆசிய வலசை பகுதியில் உள்ளது.




## நிபந்தனைகள்

2 அழிந்து வரும் பாம்புத் தாரா மற்றும் வெள்ளை அரிவாள் மூக்கன் ஆகிய பறவைகளுக்கு புகலிடமாக திகழ்கிறது.

3 ஒரு குறிப்பிட்ட உயிர் புவியியல் பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தை பராமரிக்க உதவுகிறது.

4 பாம்புத் தாரா மற்றும் வெள்ளை அரிவாள் மூக்கன் போன்ற பறவையினங்களின் வாழ்க்கை சுழற்சியில் முக்கிய கட்டத்தில் ஆதரவு வழங்குகிறது.

5 இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட நீர்பறவைகளை தொடர்ந்து ஆதரிக்கிறது.


கருந்தலை அரிவாள் மூக்கன்



Ramsar Convention on Wetlands


# கோடியக்கரை வன உயிரின மற்றும் பறவைகள் சரணாலயம்




| | | |
|---|---|---|
| தலம் எண் | : | 1210 |
| அறிவிக்கை செய்த நாள் | : | 19.08.2002 |
| மாவட்டம் | : | நாகப்பட்டினம் & திருவாரூர் |
| அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை | : | 10°17′22″N 79°25′52″E |
| நிலப்பரப்பு | : | 38,500 ha |

## சிறப்பு அம்சங்கள்

* தமிழ்நாட்டின் மிகப் பெரிய வெளிமான் இனத்தொகையை ஆதரிக்கிறது.
* இத்தலம் மத்திய ஆசிய வலசை பகுதியில் உள்ளது.
* சர்வதேச பறவை மற்றும் உயிரியல் பன்முகத்தன்மை பகுதி குறியீடு: IN-TN-20.
* வரலாற்று சிறப்புமிக்க சோழ காலத்து கலங்கரைவிளக்கம் அமைந்துள்ளது




## நிபந்தனைகள்

2 அழிந்து வரும் வெளிமான், கரண்டிவாய் உள்ளான் மற்றும் கடல் ஆமைகள் போன்ற உயிரினங்களுக்கு புகழிடமாக திகழ்கிறது.

5 இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட நீர்பறவைகளை தொடர்ந்து ஆதரிக்கிறது.

6 மஞ்சள் மூக்கு நாரை, கூழைக்கிடா மற்றும் வெள்ளை அரிவாள் மூக்கன் ஆகிய பறவைகளின் 1% எண்ணிக்கையை தொடர்ந்து ஆதரிக்கிறது.

8 மீன்களின் இனப்பெருக்கத்தலம், வலசைப்பாதை மற்றும் உணவுகளை வழங்கும் மூலாதாரமாகத் திகழ்கிறது.





# சித்திரங்குடி பறவைகள் சரணாலயம்


| | | |
|---|---|---|
| தலம் எண் | : | 2491 |
| அறிவிக்கை செய்த நாள் | : | 13.08.2022 |
| மாவட்டம் | : | இராமநாதபுரம் |
| அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை | : | 9°20′28″N 78°28′40″E |
| நிலப்பரப்பு | : | 260.47 ha |



அன்றில்

## சிறப்பு அம்சங்கள்

* சர்வதேச பறவை மற்றும் உயிரியல் பன்முகத்தன்மை பகுதி குறியீடு: IN-TN-06.
* பறவை எச்சத்தால் வளப்படுத்தப்பட்ட நீர் விவசாய உற்பத்தியை அதிகப்படுத்த உதவுகிறது.




## நிபந்தனைகள்

3 ஒரு குறிப்பிட்ட உயிர் புவியியல் பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தை பராமரிக்க உதவுகிறது.

4 நத்தைகொத்தி நாரை மற்றும் கூழைக்கிடா போன்ற பறவையினக்களின் வாழ்க்கை சுழற்சியில் முக்கிய கட்டத்தில் ஆதரவு வழங்குகிறது.

6 வெள்ளை அரிவாள் மூக்கன் மற்றும் கூழைக்கிடா போன்ற பறவையினங்களின் 1% எண்ணிக்கையை தொடர்ந்து ஆதரிக்கிறது.





# காஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயம்

| | | |
|---|---|---|
| தலம் எண் | : | 2486 |
| அறிவிக்கை செய்த நாள் | : | 13.08.2022 |
| மாவட்டம் | : | இராமநாதபுரம் |
| அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை | : | 9°21'35''N 78°28'44"E |
| நிலப்பரப்பு | : | 96.89 ha |

## சிறப்பு அம்சங்கள்

* இராமநாதபுரத்தில் 98 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள 3வது பெரிய பறவைகள் சரணாலயம்.
* சர்வதேச பறவை மற்றும் உயிரியல் பன்முகத்தன்மை பகுதி குறியீடு: IN-TN-06.

## நிபந்தனைகள்

2 அழிந்து வரும் ஆற்று ஆலா மற்றும் வெள்ளை அரிவாள் மூக்கன் ஆகிய பறவைகளுக்கு புகலிடமாக திகழ்கிறது

3 ஒரு குறிப்பிட்ட உயிர் புவியியல் பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தை பராமரிக்க உதவுகிறது.


6 பாம்புத் தாரா பறவையினத்தின் 1% எண்ணிக்கையை தொடர்ந்து ஆதரிக்கிறது.

7 உள்நாட்டு மீன்களின் துணை இனத்தின் (அ) இனத்தின் குறிப்பிடத்தக்க விகிதம் மற்றும் எண்ணிக்கையை ஆதரிக்கிறது.

8 மீன்களின் இனப்பெருக்கத்தலம், வலசைப்பாதை மற்றும் உணவுகளை வழங்கும் மூலாதாரமாகத் திகழ்கிறது.



மஞ்சள் மூக்கு நாரை






நத்தைக்குத்தி நாரை




# மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகம்

| | | |
|---|---|---|
| தலம் எண் | : | 2472 |
| அறிவிக்கை செய்த நாள் | : | 03.08.2022 |
| மாவட்டம் | : | இராமநாதபுரம் |
| அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை | : | 9°6′N 78°47′E |
| நிலப்பரப்பு | : | 52,671.88 ha |


பவளப் பூறைகள்

## சிறப்பு அம்சங்கள்

* தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் அறிவிக்கப்பட்ட முதலாவது கடல் உயிர்க்கோள காப்பகம்.
* 268 மீன்பிடி கிராமங்களில் இருக்கும் 1,10,000க்கும் மேற்பட்ட குடும்பங்களை ஆதரிக்கிறது.
* சர்வதேச பறவை மற்றும் உயிரியல் பன்முகத்தன்மை பகுதி குறியீடு: IN-TN-09.




## நிபந்தனைகள்

1. அரிதான (அ) தனித்தன்மைக்கான உதாரணமாக உள்ள இயற்கை (அ) இயற்கை அமைப்புடன் ஒத்த ஈரநிலம்.
2. அழிந்து வரும் கடல் ஆமை மற்றும் கடல் பசு போன்ற உயிரங்களுக்கு புகழிடமாக திகழ்கிறது.
3. ஒரு குறிப்பிட்ட உயிர் புவியியல் பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தை பராமரிக்க உதவுகிறது.
4. கடல் ஆமைகள், கடல் பசு, பறவைகள் மற்றும் பல இனங்களின் வாழ்க்கை சுழற்சியில் முக்கியமான கட்டத்தில் ஆதரவு அளிக்கும் ஈரநிலம்.
5. இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட நீர்பறவைகளை தொடர்ந்து ஆதரிக்கிறது.
6. கருப்புவயிற்று ஆலா, மற்றும் கரண்டிவாய் உள்ளான் போன்ற பறவையினங்களின் 1% எண்ணிக்கையை தொடர்ந்து ஆதரிக்கிறது.
7. உள்நாட்டு மீன்களின் துணை இனத்தின் (அ) இனத்தின் குறிப்பிடத்தக்க விகிதம் மற்றும் எண்ணிக்கையை ஆதரிக்கிறது.
8. மீன்களின் இனப்பெருக்கத்தலம், வலசைப்பாதை மற்றும் உணவுகளை வழங்கும் மூலாதாரமாகத் திகழ்கிறது.
9. கடல் ஆமை மற்றும் கடற்பசு போன்ற உயிரினங்களின் 1% எண்ணிக்கையை தொடர்ந்து ஆதரிக்கிறது.


பெரும் பூநாரை



Ramsar
Convention on Wetlands

# கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம்



வரித்தலை வாத்து

| | | |
|---|---|---|
| தலம் எண் | : | 2479 |
| அறிவிக்கை செய்த நாள் | : | 03.08.2022 |
| மாவட்டம் | : | திருநெல்வேலி |
| அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை | : | 8°29′44″N 78°45′14″E |
| நிலப்பரப்பு | : | 72.04 ha |

## சிறப்பு அம்சங்கள்

* கூந்தன்குளம் கிராம சமூகத்தால் இத்தலம் தீவிரமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.
* தென்னிந்தியாவில் உள்ள நீர் பறவைகளுக்கான மிகப்பெரிய இனப்பெருக்கம் செய்யும் காப்பகங்களில் ஒன்று.
* சர்வதேச பறவை மற்றும் உயிரியல் பன்முகத்தன்மை பகுதி குறியீடு: IN-TN-14.




## நிபந்தனைகள்

3 ஒரு குறிப்பிட்ட உயிர் புவியியல் பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தை பராமரிக்க உதவுகிறது.

4 கூழைக்கிடா, மற்றும் மஞ்சள் மூக்கு நாரை போன்ற பறவையினங்களின் வாழ்க்கை சுழற்சியில் முக்கிய கட்டத்தில் ஆதரவு வழங்குகிறது.

5 இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட நீர்பறவைகளை ஆதரிக்கிறது.

6 கூழைக்கிடா மற்றும் வெள்ளை அரிவாள் மூக்கன் போன்ற பறவையினங்களின் 1% எண்ணிக்கையை தொடர்ந்து ஆதரிக்கிறது.



மஞ்சள் மூக்கு ஆள்காட்டி




# சுசீந்திரம் தேரூர் ஈரநில வளாகம்




| | | |
|---|---|---|
| தலம் எண் | : | 2492 |
| அறிவிக்கை செய்த நாள் | : | 13.08.2022 |
| மாவட்டம் | : | கன்னியாகுமரி |
| அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை | : | 08°09′03″N 77°27′14″E |
| நிலப்பரப்பு | : | 94.23 ha |

## சிறப்பு அம்சங்கள்

* அச்சுறுத்தப்பட்ட பறவைகளுக்கு மற்றும் பிற உயிரினங்களுக்கு கூடு கட்டும் வாழ்விடத்தை வழங்குகிறது.
* இத்தலம் மத்திய ஆசிய வலசை பகுதியில் உள்ளது.
* சர்வதேச பறவை மற்றும் உயிரியல் பன்முகத்தன்மை பகுதி குறியீடு: IN-TN-24.




## நிபந்தனைகள்

2 அழிந்து வரும் பாம்புத் தாரா, வெள்ளை அரிவாள் மூக்கன் மற்றும் மென்தொடு ஆமை ஆகிய உயிரினங்களுக்கு புகழிடமாக திகழ்கிறது.

3 ஒரு குறிப்பிட்ட உயிர் புவியியல் பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தை பராமரிக்க உதவுகிறது.

4 பாம்புத் தாரா மற்றும் வெள்ளை அரிவாள் மூக்கன் போன்ற பறவையினங்களின் வாழ்க்கை சுழற்சியில் முக்கிய கட்டத்தில் ஆதரவு வழங்குகிறது.

5 இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட நீர்பறவைகளை ஆதரிக்கிறது.

6 கூழைக்கிடா மற்றும் வெள்ளை அரிவாள் மூக்கன் போன்ற பறவையினங்களின் 1% எண்ணிக்கையை தொடர்ந்து ஆதரிக்கிறது.

7 உள்நாட்டு மீன்களின் துணை இனத்தின் (அ) இனத்தின் குறிப்பிடத்தக்க விகிதம், எண்ணிக்கையை ஆதரிக்கிறது.





Ramsar
Convention on Wetlands


# வேம்பனூர் ஈரநிலம் வளாகம்




| | | |
|---|---|---|
| தலம் எண் | : | 2474 |
| அறிவிக்கை செய்த நாள் | : | 3.08.2022 |
| மாவட்டம் | : | கன்னியாகுமரி |
| அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை | : | 08°10′54"N 77°22′34"E |
| நிலப்பரப்பு | : | 19.75 ha |

## சிறப்பு அம்சங்கள்

* 2000 ஹெக்டேர் விவசாய நிலங்களை ஆதரிக்கிறது
* சர்வதேச பறவை மற்றும் உயிரியல் பன்முகத்தன்மை பகுதி குறியீடு: IN-TN-24.




## நிபந்தனைகள்

2 அழிந்து வரும் பாம்புத் தாரா, வெள்ளை அரிவாள் மூக்கன் மற்றும் மென்தொடு ஆமை ஆகிய உயிரினங்களுக்கு புகழிடமாக திகழ்கிறது.

3 ஒரு குறிப்பிட்ட உயிர் புவியியல் பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தை பராமரிக்க உதவுகிறது.

4 மென்தொடு ஆமை மற்றும் பொரி விலங்கு போன்ற உயிரினங்களுக்கு வாழ்க்கை சுழற்சியில் முக்கிய கட்டத்தில் ஆதரவு வழங்குகிறது.

6 வெள்ளை அரிவாள் மூக்கன் பறவையினத்தின் 1% எண்ணிக்கையை தொடர்ந்து ஆதரிக்கிறது.





# வெள்ளோடு பறவைகள் சரணாலயம்




| | | |
|---|---|---|
| தலம் எண் | : | 2475 |
| அறிவிக்கை செய்த நாள் | : | 03.08.2022 |
| மாவட்டம் | : | இராமநாதபுரம் |
| அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை | : | 11°15′06″N 77°39′06″E |
| நிலப்பரப்பு | : | 77.19 ha |

## சிறப்பு அம்சங்கள்

* பறவை எச்சத்தால் வளப்படுத்தப்பட்ட நீர் விவசாய உற்பத்தியை அதிகப்படுத்த உதவுகிறது.
* இத்தலம் மத்திய ஆசிய வலசை பகுதியில் உள்ளது.




## நிபந்தனைகள்

2 அழிந்து வரும் பாம்புத் தாரா மற்றும் வெள்ளை அரிவாள் மூக்கன் ஆகிய பறவைகளுக்கு புகழிடமாக திகழ்கிறது.

3 ஒரு குறிப்பிட்ட உயிர் புவியியல் பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தை பராமரிக்க உதவுகிறது.

5 இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட நீர்பறவைகளை தொடர்ந்து ஆதரிக்கிறது.





Ramsar
Convention on Wetlands

# லாங்வுட் சோலை காப்புக்காடு

| | | |
|---|---|---|
| தலம் எண் | : | 2538 |
| அறிவிக்கை செய்த நாள் | : | 02.02.2024 |
| மாவட்டம் | : | நீலகிரி |
| அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை | : | 11° 25' 54.0984" N 76° 52' 26.9544" E |
| நிலப்பரப்பு | : | 116.007 ha |




காட்டு மாடு

## சிறப்பு அம்சங்கள்

* சர்வதேச பறவை மற்றும் உயிரியல் பன்முகத்தன்மை பகுதி குறியீடு: IN-TN - 15
* நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள 18 கிராமங்களுக்கு ஆயிரக்கணக்கான கன மீட்டர் தண்ணீர் வழங்குவதன் மூலம் கோத்தகிரி பகுதிக்கு இந்த தலம் முக்கிய நீர் ஆதாரமாக விளங்குகிறது.

## நிபந்தனைகள்

1. மேற்குத் தொடர்ச்சி மலைகளின் உயரமான இடங்களில் காணப்படும் சதுப்பு நிலங்கள் மற்றும் நீரோடைகள் பிரதிநிதித்துவ இயற்கை ஈரநில வகைகள் ஆகும்.
2. அழிந்து வரும் மரங்கள், பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன மற்றும் இருவாழ்விகள் ஆகிய உயிரினங்களுக்கு புகலிடமாக திகழ்கிறது.
3. உயிர் புவியியல் பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தை பராமரிக்க உதவுகிறது.
4. இங்கு மட்டுமே காணப்படும் தவளை இனங்களின் வாழ்க்கை சுழற்சியில் முக்கியமான கட்டத்தில் ஆதரவு அளிக்கிறது.






கொண்டை வல்லூறு
நடனமாடும் தவளை
செங்கறுப்பு ஊசித்தட்டான்




# கரைவெட்டி பறவைகள் சரணாலயம்

| | | |
|---|---|---|
| தலம் எண் | : | 2537 |
| அறிவிக்கை செய்த நாள் | : | 02.02.2024 |
| மாவட்டம் | : | அரியலூர் |
| அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை | : | 10° 58' 32.232" N 79° 2' 40.4124" E |
| நிலப்பரப்பு | : | 453.7 ha |


கருந்தலை அரிவாள் மூக்கன்

## சிறப்பு அம்சங்கள்

* அழிந்து வரும் பறவைகளுக்கு மற்றும் பிற உயிரினங்களுக்கு கூடு கட்டும் வாழ்விடத்தை வழங்குகிறது.
* பறவை எச்சத்தால் வளப்படுத்தப்பட்ட நீர் விவசாய உற்பத்தியை அதிகப்படுத்த உதவுகிறது.
* சர்வதேச பறவை மற்றும் உயிரியல் பன்முகத்தன்மை பகுதி குறியீடு: IN-TN-13.




## நிபந்தனைகள்

2 அழிந்து வரும் களியன், ஆற்று ஆலா மற்றும் மென்தொடு ஆமை ஆகிய உயிரினங்களுக்கு புகலிடமாக திகழ்கிறது.

3 உயிர் புவியியல் பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தை பராமரிக்க உதவுகிறது.

4 கூழைக்கிடா, வெள்ளை அரிவாள் மூக்கன், மென்தொடு ஆமை மற்றும் பல இனங்களின் வாழ்க்கை சுழற்சியில் முக்கியமான கட்டத்தில் ஆதரவு அளிக்கிறது.

5 இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட நீர்பறவைகளை தொடர்ந்து ஆதரிக்கிறது.

6 வெள்ளை அரிவாள் மூக்கன் மற்றும் பாம்புத் தாரா போன்ற பறவையினங்களின் 1% எண்ணிக்கையை தொடர்ந்து ஆதரிக்கிறது.


வரித்தலை வாத்து







Photography: Samson P Samuel